## த.வெ.க. அமைச்சர் – எம்.எல்.ஏ.வின் ஊழல் ஆதாரங்களை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம்!

# மக்களின் எதிர்ப்பை திசைதிருப்பவே த.வெ.க. அரசு 'ரெய்டு' நாடகம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, செப்.18-**

**த.வெ.க. அரசின் மீதான மக்களின் எதிர்ப்பை, அதிருப்தியை திசை திருப்பவே ரெய்டு நாடகம் நடைபெறுகிறது. த.வெ.க. அமைச்சரும், எம்.எல்.ஏ.வும் செய்து கொண்டுள்ள ஊழல் ஆதாரத்தை உரிய நேரத்தில் வெளிப்படுத்துவோம் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.**

**தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி நேற்று முன்தினம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது.**

### ஒரே நாளில் 6 கொலைகள்!

**செய்தியாளர்கள்:-** முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் வீட்டில் சோதனை நடைபெறுகிறது. இது குறித்து என்ன கருத்து தெரிவிக்கிறீர்கள்,

**ஆர்.எஸ்.பாரதி:-** தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது, நேற்று முன்தினம் (15.09.2026) மட்டும் ஒரே நாளில் 6 படுகொலைகள் நடைபெற்றுள்ளது, நீதிமன்றத்தில் கையெழுத்து போட்டு விட்டு வெளியே வந்த ஒருவரை சரமாரியாக வெட்டிக் கொன்றுள்ளார்கள். அதுமட்டுமல்ல, திருப்பதி கொடை ஊர்வலத்திற்கு பாதுகாப்பு பணியில் இருந்த பெண் போலீசாரிடம் த.வெ.க. நிர்வாகி சில்மிசத்தில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து அந்தப் பெண் போலீசும் புகார் அளித்து அதன் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டும், த.வெ.க. வை சார்ந்த ஒரு அமைச்சர் தலையிட்டதின் பெயரில் அந்த சில்மிச நிர்வாகி உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதுபோன்று பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசாக தான் இந்த அரசு நடைபெற்று வருகிறது.

### விலைவாசி உயர்வு!

அதுமட்டுமல்ல விலைவாசி கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பிருந்ததை விட தற்பொழுது அதிக அளவு உயர்ந்துள்ளது, குறிப்பாக தி.மு.க. ஆட்சியின் போது கடந்த ஏப்ரல் மாதம் ஒரு மூட்டை அரிசியின் விலை 1600 ஆக இருந்தது தற்பொழுது 2200 ரூபாயாக உயர்ந்துள்ளது துவரம் பருப்பு ஒரு கிலோ 150 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சீரான மின்விநியோகம் இல்லாமல் இருளில் மூழ்கி போய் உள்ளது, எங்கு பார்த்தாலும் குடிநீர் திண்டாட்டம், இதையெல்லாம் சரி செய்ய முடியாத அரசு, பிரச்சனைகளை திசை திருப்பும் போக்கில் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வீட்டில் ரெய்டு என்கிற பெயரில் மடைமாற்ற பார்க்கிறது,

### திசை திருப்பவே ரெய்டு நாடகம்!

தி.மு.க. வரலாற்றில், கடந்த 50 ஆண்டு காலமாக, பல்வேறு ரெய்டுகளை சந்தித்து இருக்கிறோம், எதிலும் உண்மை இல்லாத காரணத்தினால் இதுவரை எந்த குற்றமும் நிரூபிக்கப்படவில்லை.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் 2001 ஜூன் மாதம் 30 ஆம் தேதி மேம்பாலம் கட்டியதில் ஊழல் நடைபெற்றதாக நள்ளிரவில் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டார்.



25 ஆண்டுகளை கடந்தும் இன்னும் அந்த வழக்கில் உண்மை இல்லாத காரணத்தினால் அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளது, அதுமட்டுமல்ல தற்பொழுது இடைத்தேர்தல் நடைபெறுகிற காரணத்தினால், இந்த ஆட்சியின் மீது உள்ள தவறுகளை மூடி மறைப்பதற்காக மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இந்த ரெய்டு நடைபெற்று வருகிறது. இதனை நாங்கள் சட்டப்படி எதிர்கொள்வோம்.

### மாற்றமல்ல; ஊழலின் நாற்றம்!

**செய்தியாளர்கள் :-** முதலமைச்சர் விஜய் நாங்களும் தப்பு செய்ய மாட்டோம் யாரு தப்பு செஞ்சாலும் விடமாட்டோம், என்று சொல்லி இருக்கும் பட்சத்தில் தாம்பரத்தில் நடைபெற்ற டெண்டர் ஊழல் பற்றி,

**ஆர்.எஸ்.பாரதி :-** மாற்றம் மாற்றம் என்று சொன்னார்கள் இதுதான் மாற்றம், ஊழலின் நாற்றம். எப்பொழுதுமே ஒரு டெண்டர் விடப்பட்டு அதன் பிறகு பணிகள் தொடங்குவது என்பது ஆங்கிலேயர் காலத்தில் இருந்து நடைமுறை, ஆனால் இந்த ஆட்சி சற்று வித்தியாசமானது, பணிகளை முடித்துவிட்டு அதன் பிறகு டெண்டர் விடுவது என்பது தாம்பரத்தில் வித்தியாசமாக நடைபெற்றுள்ளது, இதுதான் இந்த ஆட்சியின் மாற்றம் என்பது , இதனை எல்லாம் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்,

இதுபோன்று இந்த ஆட்சியில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்று உள்ளது, இதனை எல்லாம் எங்களது சட்டத்துறை ஆதாரத்துடன் சேகரித்து வருகிறது , உதாரணத்துக்கு இன்னொன்றை சொல்ல வேண்டும் என்றால், 12 மதுபானங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்படுகின்றன, 24 மணி நேரத்தில் மீண்டும் அந்த 12 மதுபானங்களுக்கு மீண்டும் அனுமதி அளிக்கப்படுகிறது, அப்படி என்றால் இதன் பின்னணியில் நடந்தது என்ன, இதனை எல்லாம் நாங்கள் சேகரித்து வைத்து வருகிறோம், ஊழலை ஒழிக்க போவதாக சொன்ன உத்தமர் விஜய் ஆட்சியில் ஏராளமான ஊழல்கள் நடைபெற்று வருகின்றன, ஏன் அவரே வரி ஏய்ப்பு செய்தது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு ஒரு கோடி அபராதம் கட்ட சொன்ன வரலாறு , இதற்கு முன்னால் வருமான வரி கட்டவில்லையென சினிமா துறையில் இருந்து முதல்வர்கள் ஆன கலைஞர் அவர்களுக்கோ, எம்.ஜி.ஆருக்கோ, ஜெயலலிதாவுக்கோ எந்த நீதிமன்றமும் இது போன்ற ஒரு உத்தரவு பிறப்பித்தது கிடையாது,

**செய்தியாளர்கள் :-** முதலமைச்சர் விஜய் அவர்களின் லண்டன் பயணம் குறித்து,

**ஆர்.எஸ்.பாரதி :-** முதல்வர் விஜய் அவர்கள் தொழில் முதலீட்டை ஈர்க்க லண்டன் செல்வதாக கூறிவிட்டுச் சென்றார் , ஆனால் அவர் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாட்டு மக்களே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அவர் தமிழ்நாடு திரும்பியதும் என்ன முதலீடுகளை ஈர்த்துக் கொண்டு வந்தார் என்பதை சொல்லும் போது மக்கள் அதனை ஆராய்ந்து பார்க்க தான் போகிறார்கள்.

**செய்தியாளர்கள் :-** பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைவதற்கு மீனவ மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்களே..?

**ஆர்.எஸ்.பாரதி :-** இந்த அரசு மக்கள் விரோத அரசு என்பதற்கு மற்றும் ஒரு எடுத்துக்காட்டு மீனவ மக்கள் அதிகம் வசிக்கின்ற பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகத்தை கட்ட எடுத்துக் வரும் நடவடிக்கை ஒன்றாகும்.

புதிய தலைமை செயலகம் கட்டவுள்ள இடத்தேர்வுக்கு மக்கள், குறிப்பாக மீனவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இது மீனவ மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி, கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்கள் தான் அப்பகுதியில் குடிசையில் இருந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார், அதன் பிறகு அதனை ஒட்டிய பகுதியில் வசித்த மீனவர்களுக்கு கலைஞர் அவர்கள் குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தார்.

இதையெல்லாம் கடந்த கால வரலாறு, இந்த வரலாறு தற்போது உள்ள த.வெ.க. அமைச்சர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம், ஆனால் அமைச்சரவையில் உள்ள இரண்டு காங்கிரஸ் அமைச்சர்களுக்கு எப்படி தெரியாமல் போனது என்பது தான் வேடிக்கையாக உள்ளது, உண்மையான பழைய காங்கிரஸ் காரர்களா இருந்தால் வரலாற்றை மறந்து இருக்க மாட்டார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

---

### மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில்

# அரசியல் தலையீடு உள்ளது!

## அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் பேட்டி!

மதுரை, செப்.18-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் மற்றும் அறங்காவலர் குழுவினர் நேற்று முன்தினம், நிருபர்களிடம் கூறியதாவது:-



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழாவை எந்தவித கருத்து வேறுபாடுகளுக்கும் இடம் கொடுத்து விடாமல் ஒருமித்த கருத்துடன் அனைவரும் மகிழ்ச்சியாக நடத்திட வேண்டும் என நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், குடமுழுக்கு விழா அழைப்பிதழில் எங்களின் பெயர் புறக்கணிக்கப்பட்டது. நீதிமன்றம் அறிவுறுத்தி அது பேசுபொருளானது. ஆனால் விழா சீரும் சிறப்பாக நடைபெற வேண்டிய இந்நேரத்தில் பக்தர்களின் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்டவற்றை தாண்டி முறையான வழிகாட்டு நெறிமுறைகள் அனைவரும் தெரிந்து கொள்ளும்படி வெளியிடப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நன்கொடைதாரர் மற்றும் உபயதாரர்களுக்கு பாஸ் சென்று சேர்ந்துள்ளதா என எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை. கடந்த 1963ல் மறைந்த பி.டி. ராஜன் தலைமையில் இத்திருகோயில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்று, மீனாட்சி அம்மனுக்கு வைரக்கிரீடம் சாற்றிய குடும்பத்தின் வழிவந்த எங்களின் குடும்பத்தில் என்றைக்குமே அரசியலையும், ஆன்மீகத்தையும் நாங்கள் இணைத்து பார்த்ததில்லை. ஆனால், மீனாட்சி அம்மன் குடமுழுக்கு நிகழ்வில் அரசியல் தலையீடு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### அரசியல் காழ்ப்புணர்ச்சியால் சோதனை!

# தி.மு.க.வினர் எதற்கும் அஞ்ச மாட்டார்கள்!

## சட்டப்படி எதிர்கொள்வோம் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, செப்.18-

திருச்சி தென்னூரில் உள்ள முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இல்லத்தில் நடந்த சோதனை நிறைவடைந்தது.

இதைதொடர்ந்து, தென்னூரில் செய்தியாளர்களுக்கு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:



சந்தேகத்தின் அடிப்படையில் எனது இல்லத்தில் 8 மணி நேரமாக அதிகாரிகள் சோதனையிட்டனர்.

காலை 7 மணியளவில் அதிகாரிகள் இல்லத்தில் நுழைந்ததில் இருந்து முடியும் வரை முழு ஒத்துழைப்பு தரப்பட்டது.

எனது வீட்டில் வைத்திருந்த கல்வித்துறை சார்ந்த ஆவணங்களை மத்திய குற்றப்பிரிவு போலீசார் எடுத்து சென்றனர்.

புதிய தலைமைச் செயலகம், இடைத்தேர்தல் தொடர்பாக பேசியதால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சோதனை நடத்தப்பட்டுள்ளது.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இதுபோன்ற சோதனைகளை டேக் டைவர்ஷன் த.வெ.க. அரசு மேற்கொண்டுள்ளது.

நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் இல்லை நாங்கள், 75 ஆண்டு கால இயக்கம் தி.மு.க.

மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை, தி.மு.க.வினர் எதற்கும் அஞ்சமாட்டார்கள்.

எனக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை செய்த அதிகாரிகள் எனக்கு எதிராக செயல்படுமாறு அன்பாக மிரட்டுகின்றனர். இந்த சோதனை உங்களுக்கு இல்லைங்க, அவரை குறிவைத்து தான், அவருக்கு எதிராக சொல்லுங்க என அன்பாக மிரட்டுகிறார்கள்.

18ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு அதிகாரிகள் கூறிச்சென்றனர்.

18ம் தேதி காலை 11 மணிக்கு விசாரணைக்கு ஆஜரான பின்னர் நேரடியாக இடைத்தேர்தல் நடக்கும் தாராபுரத்திற்கு செல்வேன்.

மிசா சட்டம், மு.க. ஸ்டாலின் குறித்து சட்டசபையில் அவதூறாக பேசிய அமைச்சர்கள் மீது வழக்குப்பதிய வேண்டும்.

இவ்வாறு அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

---

### முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மீது

# தேர்தல் வெற்றியை எதிர்த்த வழக்கு தள்ளுபடி!

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, செப். 18-

தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வெற்றியை எதிர்த்து, த.வெ.க., வேட்பாளர் அருள் ஆறுமுகம் தொடர்ந்த தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் திருவண்ணாமலை தொகுதியில் தி.மு.க., சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு 2,455 ஓட்டுகள் வித்தியாசத்தில் த.வெ.க., வேட்பாளர் அருள் ஆறுமுகத்தை தோற்கடித்தார். இதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் அருள் ஆறுமுகம், தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கில் எ.வ.வேலு மற்றும் தேர்தல் ஆணையம் பதில் தர உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் தனக்கு எதிராக தொடரப்பட்ட தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி எ.வ.வேலு மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி டி.பரதசக்ரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. எ.வ.வேலு தரப்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், வழக்கறிஞர் ரிச்சட்சன் வில்சன் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி, எ.வ.வேலுவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை விசாரிக்க எந்த ஆதாரமும் இல்லை என்று கூறி நிராகரித்து உத்தரவிட்டார்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வம், தட்டாஞ்சாவடியில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி அர்ஜுன் ராமகிருஷ்ணனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கலின் போது புதுச்சேரி மாநில தேர்தல் பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா, எதிர்க்கட்சித் தலைவர் நாஜிம், சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில்குமார், விக்னேஷ் கண்ணன், விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் லட்சுமணன் எம்.எல்.ஏ., வானூர் தொகுதி எம்.எல்.ஏ., கௌதம் திராவிட மணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

# திருவள்ளூர் முரசொலி முகவர் ஜி.சுரேஷ் (எ) இம்மானுவேல் திருமண வரவேற்பு!

திருவள்ளூர், செப்.18-

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் புங்கத்தூர்கிராம்கோவிந்தசாமி- பொன்னம்மாள் ஆகியோர் மகனும் திருவள்ளூர் முரசொலி முகவர் ஜி.சுரேஷ் (எ) இம்மானுவேல், திருவள்ளூர் மாவட்டம் சேலை கிராமம் சேர்ந்த அன்பழகன் ராணி ஆகியோர் மகள் ஏ.ரம்யா (எ) கெஸியால் ஆகியோருக்கு திருமண வரவேற்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் (16.09.2026) மாலை 6 மணியளவில் திருவள்ளூர் காமராஜர் சாலையில் அமைந்துள்ள எம்.ஆர். எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இத்திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கவுன்சிலர்கள், பத்திரிகைத் துறையைச் சார்ந்த செய்தியாளர்கள், முகவர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

மணமக்களின் இல்லறவாழ்வு அன்பும், மகிழ்ச்சியும், வளமும் நிறைந்து சிறக்க அனைவரும் வருகை தந்து வாழ்த்தினர்.

---

### சிவகங்கையில் இரட்டை கொலை:

# தமிழ்நாடு அதல பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது!

## தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!

சென்னை,செப்.18-




நேற்று ராமநாதபுரத்தில் இரட்டைக் கொலை, இன்று சிவகங்கையில் இரட்டைக் கொலை என தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு கேடு கெட்டுப் போயுள்ளது. முதலமைச்சரோ தனது சொகுசு சுற்றுலாவில் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

ஒரு பக்கம் மின்வெட்டு, அரசு மருத்துவமனையின் அவலம், அரசு துறையில் லஞ்சம், ஊழல், சட்ட ஒழுங்கில் தினம் ஒரு இரட்டை கொலை என தமிழ்நாடு அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. ஒட்டுமொத்தத்தில் தன் நிர்வாக சீர்கேட்டால் தமிழ்நாட்டை பல ஆண்டுகள் பின்னோக்கி இழுத்து சென்றுவிட்டது இந்த மானம்கெட்ட மாற்றத்தின் ஆட்சி.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் குற்றம் சாட்டியுள்ளது.